OS 128/2024

பி.வா.சா.1 வேண்டா க/பெ செல்வராஜ்

நாள் 23.02.2026

**குறுக்கு விசாரணை**

1. வாதி ஆனந்தனை தெரியும். வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ரூ.1,25,000/- பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1ஐ ரிஜிஸ்டர் ஆபிசில் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் சர்வே எண்.229/1ல் 1 ஏக்கர் 53 செண்ட்டில் 25 செண்டிற்கு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரிதான். வாதி ஆனந்தனுக்கு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தேன் என்றால் பிரகாஷ் என்பவர் பணம் கொடுத்தார் ஆனந்தன் பெயருக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொண்டார். ஆனந்தனும் அன்றைய தினம் ரிஜிஸ்டர் ஆபிசிற்கு வந்திருந்தாரா என்றால் வந்திருந்தார். எனது கணவர் செல்வராஜ் வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறாரா என்றால் சரிதான். வட்டி ஏதேனும் செலுத்தியிருக்கிறேனா என்றால் ஒரு வருடம் வட்டி செலுத்தியிருக்கிறேன். மாதம் மாதம் ரூ.6,250/- வட்டி செலுத்தியிருக்கிறேன். ஆனந்தனிடம் வட்டி பணம் கொடுத்தேனா என்றால் அவரிடம் கொடுக்கவில்லை பிரகாஷிடம் தான் வட்டி கொடுத்தேன். பிரகாஷிடம் பணம் கொடுத்ததற்கு எழுதி வாங்கியிருக்கிறேனா என்றால் எழுதி வாங்காமல் கொடுத்துவிட்டேன்.

2. எனது எதிர்வழக்குரையில் பிரகாஷிடம் பணம் வாங்கியதாக விவரம் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். பிரகாஷிடம் எந்த எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் நான் எழுதி வைக்கவில்லை. ரூ.70ஆயிரம் கொடுத்து இருக்கிறேன். வழக்கறிஞரிடம் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. வா.சா.ஆ.1 சொத்திற்கான பட்டா எனது பெயரில் இருக்கிறது. அசல் ஆவணம் வாதியிடம் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 எனக்கு வந்ததா என்றால் வந்தது. அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் பதில் கொடுத்தேன். எனது பதில் அறிவிப்பில் பிரகாஷிடம் பணம் வாங்கியதாக விவரம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பதில் அறிவிப்பில் ரூ.70ஆயிரம் கொடுத்ததற்கான தேதி விவரம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ.70ஆயிரம் கொடுத்ததற்கான ஆதாரம் இருக்கிறதா என்றால் இல்லை. நான் பணம் எதுவும் திருப்பி கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. வழக்கில் தீர்ப்பானால் பணத்தை திருப்பி கொடுக்க தயாரா என்றால் தயார் தான் ஏற்கனவே ரூ.70 ஆயிரம் கொடுத்து இருக்கிறேன். வாதி பணத்தை திருப்பி கேட்க கால அவகாசம் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கால அவகாசம் 30 மாதம் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 30 மாதங்கள் கழித்து 1 வருடத்திற்குள் வாதி வழக்கு தாக்கல் செய்திருப்பதால் காலதோஷத்தால் வழக்கு பாதிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.